**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.78/2011**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.03.2026 | | |
| பெயர்: | குமார்<br>(PW1– Cross ) | தகப்பனார் பெயர்: | ராஜமாணிக்கம் |
| கிராமம்: | வைத்தீஸ்வரன்கோவில் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 48/2026 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 24.03.2026**

**(ஆரம்பித்த நேரம்– 12.48)**

1. வா.சா.ஆ.5 ஆவணமானது எனது தகப்பனார் ராஜமாணிக்கம் பெயரிலான வாக்காளர் அடையாள அட்டை என்றால் சரிதான். அதில், ராஜமாணிக்கத்தின் தகப்பனார் பெயராக வரதராஜன் என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாவில் ராஜமாணிக்கத்தின் தகப்பனார் பெயர் கோவிந்தராஜீ என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் சொத்து விபரத்தில் கீழ், மேல் அளவு 48 அடி என்று உள்ளது என்றால் சரிதான். தென், வடல் அளவு இல்லை என்றால் சரிதான்.

2. தெற்கு, வடக்கு நீளம் எவ்வளவு என்று வா.சா.ஆ.6 ஆவணத்தில் தெளிவாக இல்லை என்றால் சரியல்ல. அதனால், சொத்துவிபரம் முழுமை அடையவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் எனது தகப்பனார் ராஜமாணிக்கத்தின் தகப்பனார் பெயராக வரதராஜன் என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டாவில் ராஜமாணிக்கத்தின் தகப்பனார் பெயர் கோவிந்தராஜீ என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரய சாசனத்தில் ராஜமாணிக்கத்தின் தகப்பனார் பெயர் வரதராஜன் என்று உள்ளது என்றால்

சரிதான்.

3. எனது தாத்தா வரதராஜனை கோவிந்தராஜீம் என்றும் அழைப்பார்கள். தாவா சொத்திற்கும், வா.சா.ஆ.7 ஆவணத்திற்கும் சம்பந்தம் உண்டா என்றால் சம்பந்தம் உள்ளது. எனது தாத்தாவின் பெயருக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் வழக்கிற்காக தனது தகப்பனார் ராஜமாணிக்கத்தின் தகப்பனார் பெயரை வரதராஜன் என்றும், கோவிந்தராஜீ என்றும் கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனால், நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–13.01)**